

ஆலந்தூர் தெற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழகசெயலாளர் 12வது மண்டலகுழுதலைவருமான என்.சந்திரன் ஏற்பாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் நலதிட்ட உதவிகள் வழங்கும் விழா நங்கநல்லூர், ஸ்டேட் பேங்க் காலனியில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன் மற்றும் திராவிட இயக்க தமிழ்பேரவை பொதுசெயலாளர் பேராசிரியர் சுபவீரபாண்டியன் பொதுக்கூட்டத்தில் தலைமையுரையாற்றி 1000 தாய்மார்களுக்கு இட்லி குக்கர் வழங்கினார்கள். நிகழ்ச்சியில் கழக தொழிலாளர் அணி செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் பா. குணாளன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ். கே.இப்ராஹிம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாநில சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பா. சாய் ஜெயகாந்த், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி. பூபாலன், கீதா ஆனந்தன், இரா.பாஸ்கரன், மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் ஆர். ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், மாவட்ட சுற்றுச்சூழல் அமைப்பாளர் கே. ஆர்.ஆனந்தன், ஆலந்தூர் தெற்கு பகுதி நிர்வாகிகள் ஜி.சுந்தர்ராஜன், ஆர். பாபு, ஏ. சாலமோன் எம்.சி. கே.ராஜேஸ்வரி சத்யா, இ.ரமேஷ், வட்ட செயலாளர்கள் ஜெ. நடராஜன்,மற்றும் நிர்வாகிகள் கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கோல்டு டி.பிரகாஷ் ஏற்பாடு! ப.குணாளன் – என்.சந்திரன் வரவேற்பு! – இன்று

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் - நலஉதவிகள்!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்குகிறார்! ஐ.லியோனி – டி.ஆர்.பாலு எம்.பி. – ஆர்.எஸ்.பாரதி பங்கேற்பு!

சென்னை,டிச.18-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தி.மு.க. இளைஞர்அணி சார்பில் இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் - நலஉதவிகள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் ஏற்பாட்டில் இன்று (19.12.2024 வியாழக்கிழமை) மாலை 5.00 மணிக்கு தர்மராஜா கோவில் தெரு, ஆலந்தூர் 16.ல் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர்கள் ஆலந்தூர் ப.குணாளன், என்.சந்திரன் எம்.பி. ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் பொது மக்களுக்கு நல உதவிகளை வழங்குகிறார்.

இதில் திண்டுக்கல் ஐ.லியோனி, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் மீ.அ.வைத்தியலிங்கம், எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ., இ. கருணாநிதி எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., பிரபு கஜேந்திரன், இரா.ராஜீவ்காந்தி ரூ.கீர்த்தனா, டி.பாபு, ஏ.வந்தேமாதரம், ஜி.கே.விவேகாநந்தன் [ஏ] ரவி, எம்.எஸ்.கே.இப்ராகிம் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், இரா.பாஸ்கரன் உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிக்ள பங்கேற்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் கே.பி.முரளிகிருஷ்ணன் நன்றியுரையாற்றுகிறார்.

கோ.பிரவீன்குமார், எஸ். ஜெனார்த்தனன், எம்.விக்னேஷ், சுனில் பால்ராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

### ந.அதியமான் தலைமையில்

# 105 வது வட்டத்தில் பொதுக்கூட்டம்!

### நே.சிற்றரசு - தயாநிதிமாறன் - எம்.கே.மோகன் - ந.இராமலிங்கம் பங்கேற்பு!

சென்னை,டிச.18-

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் தெற்கு பகுதி 105 வது வட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (19.12.2024) வியாழக்கிழமை மாலை 6.30 மணி அளவில் அரும்பாக்கம் பெருமாள் கோவில் தெருவில்

105 வது வட்ட கழகச் செயலாளர் ந.அதியமான் எம்.சி. தலைமையில் நடைபெறுகிறது. இதில் ஏகேமூர்த்தி, எஸ்.பி குமார், ஆர். எஸ் கில்பர்ட்,பானுமதி கிருஷ்ணசாமி Dr.ஜீவகன் அய்யநாதன், மற்றும் வட்ட செயலாளர்கள் . இரா. பொன்னுரங்கம் இரா.நவீந்திர குமார் மகேஷ் ராஜா தெ.கருணாநிதி வி.எம். சிவா ஆகியோர் முன்னிலையில் இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி.. எம்.கே மோகன் எம்.எல்.ஏ பகுதி செயலாளர் ந. இராமலிங்கம் எம்.சி ஆகியோர் நல உதவிகளை வழங்குகின்றனர். துணைப் பொதுச் செயலாளர் திராவிட கழகம் வழக்கறிஞர் சே.மெ மதிவதனி தலைமை கழக பேச்சாளர்

திருச்சி சேகர் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணை செயலாளர்

கார்த்திக் மோகன், தமிழன் பிரசன்னா, ஆகியோர் இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றுகின்றனர். அரிமா டாக்டர் சந்திரபாபு, சி. சேரன் எஸ்.ராம்குமார் ஏ.டி.முருகன் ராணி ரவிச்சந்திரன், கராத்தே ஆனந்தன், மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என்.துறை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, அகஸ்டின் பாபு, ஐ.கென்னடி, வழக்கறிஞர் நன்மாறன், பா.பிரகாஷ், துபாய் வி.ஆர் விஜய், வழக்கறிஞர் தேவேந்திரன், வழக்கறிஞர் ஆனந்தகுமார், அசோக் குமார், யோகேஸ்வரி, சுந்தரராஜன், குட்டி

எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன், டி.எஸ்.ராஜா ரங்கராஜ்,

லதா பிளாரன்ஸ், முரசொலி ஜெயக்குமரன், நடராஜன், தட்சிணாமூர்த்தி, நித்யானந்தம், துரை, அன்பில், பாபு, கிருஷ்ணமூர்த்தி, யூனிஸ் மொய்தீன், சௌகத் அலி, ஏ.வா. பாலகிருஷ்ணன், விஜயா, கோபால், என்.ஆர்.பாபு,

உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

இறுதியில் 105வது வட்ட துணை செயலாளர்கள் ஏ. ரமேஷ் எஸ்.எம்.மாறன், ஏ.ஜோஸ்மேரி ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

### ஆலந்தூர் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

# இனமான பேராசிரியர் பிறந்தநாள் கொண்டாட்டம்!

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் மரியாதை செலுத்துகிறார்!

### பகுதிச் செயலாளர் ப.குணாளன் அறிக்கை!

சென்னை, டிச.19-

இனமான பேராசிரியர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு 19.12.2024 (வியாழக்கிழை) இன்று காலை 09.00 மணியளவில் ஆலந்தூர் சட்டமன்ற அலுவலகத்தில் ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்டுள்ள இனமான பேராசிரியர் அவர்களின் திருவுருவ படத்திற்கு காஞ்சி வடக்கு கழகச் மாவட்ட செயலாளரும், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர், தா.மோ.அன்பரசன் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தவுள்ளதால் உள்ளதால் ஆலந்தூர் வடக்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி பிரதிநிதிகள்,வட்ட நிர்வாகிகள், பகுதி அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள்,பாக முகவர்கள் (BLA2) தவறாமல் கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் தெரிவித்துள்ளார்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தென் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் தினேஷ் மாணிக்கம் தலைமை – ஏற்பாட்டில் துப்புரவுப் பணியாளர்களுக்கு சமபந்தி விருந்து மற்றும் நல உதவிகளை மாவட்ட செயலாளர் த.வேலு, மாநில துணை செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல், மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன், பகுதி செயலாளர்கள் நந்தனம் கி.மதி, எஸ்.முரளி, வட்ட செயலாளர் ராஜா சுரேஷ்குமார், அ.நாகராஜ் ஆகியோர் சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட, பகுதி, வட்ட கழகத்தை சார்ந்த கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சைதை மேற்கு பகுதி 139 வது வட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மாவட்ட பிரதிநிதி வீ.மதிவாணன். .தலைமையில் பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன்.எம்.சி. சைதை மா.அன்பரசன், களக்காடி.எல்லப்பன், வி.பி.ஜானகிராமன், வட்டச் செயலாளர்கள் அட்கோ.கமலநாதன், சை.மு.சேகர். ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜி.கே.ராமசந்திரன், மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்தி சுந்தரம், ஆர்.வி.நகர். அ.அயாத்பாஷா ஆகியோர் வரவேற்றனர். மாவட்ட செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 1000 பேருக்கு பிளாஸ்டிக்டப் வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் கழக பேச்சாளர்கள் சேலம்.சுஜாதா, ந.காருண்யா, ஆகியோரும் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் சைதை . எஸ்.குணசேகரன், பரிதி இளம் சுருதி.எம்.சி. சைதை.த.சம்பத்,ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டன், நா.மணிகண்டன், ஆர்.கிருஷ்ணகுமார், டி.என்.சிவமணி, கு.புகழ்வேந்தன், ஆர்.ரவி பால்கார். ஏ.ரவி, இரா.சத்யா மற்றம் பலர் கலந்து கொண்டனர்.

### விசாலாட்சி துரைகபிலன் எம்.சி. தலைமையில்

# வேளச்சேரி கிழக்குப் பகுதி சார்பில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் கூட்டம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் - மதுரை ஜவகர்- த.கவுசல்யா சிறப்புரை!

சென்னை, டிச. 19 -

வேளச்சேரி கிழக்கு பகுதி திமுக சார்பில் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சென்னை பெருநகர மாநகராட்சி 180 வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி விசாலாட்சி கபிலன் தலைமையில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவான்மியூர் திருவீதி அம்மன் கோயில் திடலில் தெருமுனை கூட்டம் இன்று (19.12.2024) மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கிழக்கு பகுதி கழக செயலாளர் துரை கபிலன், வட்ட கழக செயலாளர்கள் வி.எம்.டி. ராஜா ரமணன், க. கணேஷ் குமார், பொது குழு உறுப்பினர்கள் ஆர்.பாலசுந்தரம், அடையார் பி.ஜே. பாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம். விநாயகமூர்த்தி, ஆதிதிராவிடர் நலகுழு அமைப்பாளர் அடையார் சி.சுரேஷ், மீனவர் அணி அமைப்பாளர் சி.பரிமேலழகன், பகுதி கழக நிர்வாகிகள் அருணா வேலாயுதம், வழக்கறிஞர் எஸ்.சந்தானம், ஆ.ச. ஸ்ரீகாந்த், அ.ரவிகிருஷ்ணன், கே. சி.வனஜா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமை கழக பேச்சாளர்கள் மதுரை ஜவகர், த.கவுசல்யா, முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் எஸ். குணசேகரன், பாலவாக்கம் தா. விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், எஸ். பாஸ்கரன், வாசுகி பாண்டியன், சாய் ஜெயகாந்த், வட்ட கழக செயலாளர்கள் வழக்கறிஞர் ம.தமிழரசு, மு.தனசேகரன், எஸ்.ஜெயக்குமார், ஆ.பாண்டியன், பெ.ராஜி மாவட்ட பிரதிநிதிகள் டி.பாலாஜி, ம. தங்கம், இரா.மாரியப்பன், எம்.பி. ராஜேஷ், சி.கலைவாணன், செ.சிகாமணி, எஸ்.ரவிச்சந்திரன், தா.செல்வம், எ.சுரேஷ், கீ. ஆனந்த், எஸ்.மனோகரன்,

மாவட்ட துணை அமைப்பாளர்கள் மார்க்கெட் சிவா, மந்தவெளி நடராஜன், துரை சிற்றரசு, கே. நாகராஜ், ஜி.ஸ்ரீதர், ஏர்போர்ட் சுரேஷ், இறுதியாக எம்.எ.ஜானி, வழக்கறிஞர் அதிரடி எஸ்.கோபால், துரை. வைத்தீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எம்.ஏ.ஜானி, எஸ். கோபால், துரை க.வைத்தீஸ்வரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இக்கூட்டத்திற்கு வேளச்சேரி கிழக்கு பகுதிக்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் சார்பு மன்ற செயலாளர் மன்ற நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் பகுதிச் செயலாளர் துரைகபிலன் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### சென்னை குடிநீர் வாரியத்தின்

# கீழ்பாக்கம் பரிசோதனைக் கூடத்திற்கு தேசிய அங்கீகாரம்!

### சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, டிச. 19-

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் கீழ்ப்பாக்கத்தில் ரூ.7.05 கோடி மதிப்பீட்டில், குடிநீர் மற்றும் கழிவுநீரின் தரத்தை நவீன முறையில் பரிசோதிக்க புதிய பரிசோதனைக் கூடம் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. சென்னை குடிநீர் வாரியம், தரமான குடிநீர் வழங்குதல் மற்றும் பாதுகாப்பான முறையில் கழிவுநீரகற்றும் பணிகளை மேற்கொள்வதோடு, குடிநீரின் தரத்தினை பரிசோதிப்பதை ஒருங்கிணைந்த பணியாக மேற்கொண்டு வருகிறது. இப்பரிசோதனை கூடம் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய உபகரணங்கள் மூலம் திறன் வாய்ந்த நீர்பகுப்பாய்வா ளர்கள் உடன் செயல்பட்டு வருகிறது.

இவ்வாய்வகத்தில் IS10500 : 2012 & IS456 : 2000 தரவியல்படி முறையே குடிநீர் மற்றும் கட்டுமான தேவைக்கு பயன்படும் நீர் பரிசோதனை செய்யப்படுகிறது. தற்போது இப்பரிசோதனை கூடத்திற்கு National Accreditation Board For Testing And Calibration Laboratories (NABL) என்ற தேசிய அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

மேலும், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு கட்டமைப்புகளின் மூலம் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மாதிரிகளை சென்னை குடிநீர் வாரிய கழிவுநீர் அமைப்புகளில் கலப்பதற்கு முன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தரத்திற்கேற்ப தரப்பரிசோதனை செய்யப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் தங்கள் வீடுகள், வணிக பயன்பாடு, அடுக்குமாடி குடியிருப்புகளில் பயன்படுத்தும் குடிநீர், வீடுகளில் உள்ள கிணறுகள் மற்றும் ஆழ்துளை நீரின் தரம், கட்டுமான தேவைக்கான நீர் மாதிரிகள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மாதிரிகளை இந்த நவீன பரிசோதனை கூடத்தில் பரிசோதனை செய்து பயன்பெறலாம்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 153 வது வட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.நரேஷ்குமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 1048 நபர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு மிதிவண்டி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மதுரவாயல் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, 153 வது வட்டக் கழக செயலாளர் தி.சார்லஸ் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கினர். இதில் இராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி, இராமாபுரம் செ.ரவி, இரா.பால்பாண்டியன், பி.எம்.செல்வராஜ், நரேன் கணபதி, இரா.பா.உதயகுமார் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.